# ஆறாம் வகுப்பு - தமிழ் : முதற்பருவம்

## இயல்-1

## கவிதைப்பேழை : இன்பத்தமிழ் - பாரதிதாசன்

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **ஏற்றத் தாழ்வற்ற ______ அமைய வேண்டும்** **விடை : அ) சமூகம்**
2. **நாள் முழுவதும் வேலை செய்து களைத்தவருக்கு ______ ஆக இருக்கும்.** **விடை : ஈ) அசதி**
3. **நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______** **விடை : ஆ) நிலவென்று**
4. **தமிழ் +எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல். ______** **விடை : ஆ) தமிழெங்கள்**
5. **அமுதென்று என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______** **விடை : ஆ) அமுது + என்று**
6. **செம்பயிர் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______** **விடை : அ) செம்மை + பயிர்**

**குறுவினா**

1. **பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?**
   அமுதம், உயிர், நிலவு, நீர், மணம், ஊர், பால், வேல், வான், தேன், தோள், வாள்
2. **நீங்கள் தமிழை எதனோடு ஒப்பிடுவீர்கள்?**
   நான் தமிழை மன்னனோடு ஒப்பிடுவேன்.

சிறுவினா

1. **இன்பத்தமிழ் - பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் இரண்டனை எழுதுக.**
   "தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
   தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்"
2. **சமூக வளர்ச்சிக்கும் நீருக்கும் உள்ள தொடர்பு யாது?**

நீர் உள்ள இடம் எல்லாம் வளம் இருக்கும்.அதனால் நீர் சமூக வளர்ச்சிக்கு நீண்ட காலத் தொடர்பு உடையது.

## கவிதைப்பேழை : தமிழ்க்கும்மி

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தாய்மொழியில் படித்தால் ______ அடையலாம்.** **விடை : ஆ) மேன்மை**
2. **தகவல் தொடர்பு முன்னேற்றத்தால் ______ சுருங்கிவிட்டது.** **விடை : அ) மேதினி**
3. **செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : ஈ) செம்மை + தமிழ்**
4. **பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : அ) பொய் + அகற்றும்**
5. **பாட்டு + இருக்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : அ) பாட்டிருக்கும்**
6. **எட்டு + திசை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______.** **விடை: அ)எட்டுத்திசை**

**குறுவினா**

1. **தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவனயாவை?**
   பொய், அறியாமை நீக்கும். பாடல் தரும்; உண்மை ஊட்டும்; அறம் தரும்; உலகம் சிறக்க வழிகளைக் காட்டும்.
2. **செந்தமிழின் புகழ் எங்கெல்லாம் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்?**
   செந்தமிழின் புகழ் எட்டுத்திசைகள் எங்கும் பரவ வேண்டும் என்று கவிஞர் கூறுகிறார்.

**சிறுவினா**

1. **கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?**
   தமிழ் மிகவும் பழமையானது. கடல் சீற்றங்கள்,காலமாற்றங்கள் ஆகியவற்றைக் கடந்தும் நிலைத்தது இருப்பதால் காலவெள்ளத்தைக் கடந்தும் தமிழ்மொழி நிற்கின்றது.
2. **தமிழ்க் கும்மி பாடலின் வழி நீங்கள் அறிந்து கொண்டவற்றை உம் சொந்த நடையில் தருக.**
   - பொய் மற்றும் அறியாமையை அகற்றும்.
   - இன்பம் தரும் பாடல்களைத் தரும்;
   - உண்மையை ஊட்டும்;
   - உயர்ந்த அறத்தைத் தரும்;
   - உலகம் சிறந்து வாழ்வதற்கான வழிகளைக் காட்டும்.

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com

உரைநடை உலகம் : வளர்தமிழ்

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **'தொன்மை' என்னும் சொல்லின் பொருள் ______** **விடை : ஆ) பழமை**
2. **'இடப்புறம்' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ______** **விடை : ஆ) இடது + புறம்**
3. **'சீரிளமை' என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ______** **விடை : அ) சீர் + இளமை**
4. **சிலம்பு + அதிகாரம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______** **விடை : ஆ) சிலப்பதிகாரம்**
5. **கணினி + தமிழ் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______** **விடை : ஆ) கணினித்தமிழ்**
6. **"தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடியவர் ______** **விடை : ஆ) பாரதியார்**
7. **'மா' என்னும் சொல்லின் பொருள் ______** **விடை : இ) விலங்கு**

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

1.நாம் சிந்திக்கவும் சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுவது ____________ **விடை : மொழி**

2.தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல் ___________ **விடை: தொல்காப்பியம்**

3.மொழியைக் கணினியில் பயன்படுத்த வேண்டும் எனில் இது ___________ அடிப்படையில் வடிவமைக்கப்பட வேண்டும். **விடை : எண்களின்**

**குறுவினா**

**1.தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?**

தமிழில் கிடைத்துள்ள பழமையான நூல் தொல்காப்பியம்.அதற்கு முன்னரே இலக்கியங்கள் இருந்திருக்கும்.எனவே தமிழ் மூத்தமொழி என்று அழைக்கப்படுகின்றது.

**2. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**

1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3. சீவக சிந்தாமணி

**சிறுவினா**

**1. அஃறிணை, பாகற்காய் என்னும் சொற்களின் பொருள் சிறப்பு யாது?**

உயர்திணையின் எதிர்ச்சொல் தாழ்திணை என அமைய வேண்டும். ஆனால் அஃறிணை என்று பெயரிட்டு அழைக்கின்றோம்.

பாகற்காய் கசப்புச் சுவை உடையது. அதனைக் கசப்புக்காய் என்று கூறாமல், இனிப்பு அல்லாத காய் பாகற்காய் என அழைக்கிறோம்.

**2. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.**

தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை.ஓசை ,சொல் ,பொருள் ஆகியவை கொண்டவை. பாரதியாரும் தமிழ் மொழி போல் இனிமையான மொழியை வேறு எங்கும் கண்டதில்லை என்கிறார்.

**3. தமிழ் மொழியின் சிறப்புக் குறித்து ஐந்து வரிகளில் எழுதுக.**

1. பழைமையான மொழி. 2 சொல் வளம் கொண்ட மொழி.
3.அற நூல்கள் மிகுதியாகக் கொண்ட மொழி. 4.சிறப்பெழுத்துகளைக் கொண்ட மொழி
5.அறிவியல் செய்திகள் அதிகம் உள்ள மொழி.

**விரிவானம் : கனவு பலித்தது - கடிதம்**

**அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.**

**முன்னுரை**

**அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கிக்** காண்போம்.

**அத்தையின் கடிதம்**

- சாதனை படைக்க மொழி தடை இல்லை.
- சாதனையாளர்கள் தாய்மொழியிலேயே படித்துள்ளார்கள்.
- அறிவியல் சிந்தனைகளோடு விளங்கியவர்கள் தமிழர்கள்.
- தமிழில் அறிவியல் சிந்தனைகள் பல உள்ளன.
- ஐம்பூதங்கள் பற்றிய அறிவியல் செய்திகளைத் தொல்காப்பியம் கூறுகின்றது.
- திரவப் பொருள் எவ்வளவு அழுத்தினாலும் அவற்றின் அளவைச் சுருக்க முடியாது என்ற அறிவியல் கருத்தை ஔவையார் பாடலில்காண முடிகின்றது.
- புண்ணைத் தைத்த செய்திகளைப் பதிற்றுப்பத்தும்,நற்றிணையும் கூறுகின்றது.
- தொலைநோக்கி கண்டுபிடிக்கும் முன்னனே,அதன் கொள்கையைத் திருவள்ளுவ மாலை கூறியுள்ளது.

**முடிவுரை**

**அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கிக்** காண்டோம்.

**கற்கண்டு : தமிழ் எழுத்துகளின் வகையும் தொகையும்**

**கொடுக்கப்பட்டுள்ள மாத்திரை அளவுக்கேற்பச் சொற்களை எழுதுக.**

1.உயிரெழுத்தில் தொடங்கும் இரண்டு மாத்திரை அளவுள்ள சொல்--------- **விடை:உளி**

2.இரண்டு மாத்திரை அளவுள்ள ஓரெழுத்துச் சொல்------ **விடை : ஈ**

3.ஆய்த எழுத்து இடம்பெறும் இரண்டரை மாத்திரை அளவுள்ள சொல் ----- **விடை : எஃகு**

**குறுவினா**

**1.தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும்?அவை யாவை?**

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை எழுத்து இலக்கணம்,சொல் இலக்கணம்,பொருள் இலக்கணம்,யாப்பு இலக்கணம்,அணி இலக்கணம் ஆகியவை ஆகும்.

**2.மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்தி எழுதுக.**

வல்லினம்,மெல்லினம்,இடையினம் ஆகியவற்றை மெய்யெழுத்துகளை மூவகை இனங்களாக வகைப்படுத்துவர்.

**3.தமிழ் எழுத்துக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.**

1.குறில் எழுத்து - 1 மாத்திரை 2.நெடில் எழுத்து - 2 மாத்திரை 3.மெய் எழுத்து - அரை மாத்திரை

4.ஆய்த எழுத்து - அரை மாத்திரை

கடிதம் எழுதுக.

விடுப்பு விண்ணப்பம்

அனுப்புநர்

---------------(மாணவர் பெயர்)
ஆறாம் வகுப்பு,
----------------------------- பள்ளி,
----------- மாவட்டம்.

பெறுநர்

வகுப்பாசிரியர் அவர்கள்,
ஆறாம் வகுப்பு,
---------------------பள்ளி,
----------- மாவட்டம்.

மதிப்புக்குரிய அம்மா,

வணக்கம்.எனக்கு உடல்நலக் குறைவு,என்னால் பள்ளிக்கு வர இயலவில்லை.எனக்கு இருநாட்கள் விடுப்பு தேவைப்படுகின்றது.எனவே எனக்கு விடுப்பு அளிக்குமாறு பணிவுடன் வேண்டுகின்றேன்.நன்றி!

இடம் : இப்படிக்குத்
தங்கள் பணிவுள்ள,
நாள்: ----------------

இயல்-2

**கவிதைப்பேழை : சிலப்பதிகாரம்**

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **கழுத்தில் சூடுவது ________** **விடை : அ) தார்**
2. **கதிரவனின் மற்றொரு பெயர் __________** **விடை : ஆ) ஞாயிறு**
3. **வெண்குடை என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______** **விடை : ஆ) வெண்மை + குடை**
4. **பொற்கோட்டு என்னும் சொல்லைப் பிரித்து எழுதக்கிடைப்பது _______** **விடை : அ) பொன் + கோட்டு**
5. **கொங்கு + அலர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______** **விடை : ஈ) கொங்கலர்**
6. **அவன் + அளிபோல் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் _______** **விடை : ஆ) அவனளிபோல்**

ச.சேட்டு மதார்சா,ஈரோடு

குறுவினா

1. **சிலப்பதிகாரக் காப்பியம் எவ்வெவற்றை வாழ்த்தித் தொடங்குகிறது?**
   வெண்ணிலவு, கதிரவன்,மழை

2. **இயற்கை போற்றத்தக்கது ஏன்?**
   உலகத்திற்கு முதன்மையானது இயற்கையே !எனவே,இயற்கை போற்றத் தக்கதாகும்.

**கவிதைப்பேழை:காணிநிலம்**

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **கிணறு என்பதைக் குறிக்கும் சொல் ______** **விடை : ஆ) கேணி**
2. **சித்தம் என்பதன் பொருள் ______** **விடை : அ) உள்ளம்**
3. **மாடங்கள் என்பதன் பொருள் மாளிகையின் ______** **விடை : அ) அடுக்குகள்**
4. **நன்மாடங்கள் என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ______** **விடை : இ) நன்மை + மாடங்கள்**
5. **நிலத்தினிடையே என்னும் சொல்லைப் பிரிக்கக் கிடைக்கும் சொல் ______** **விடை : ஆ) நிலத்தின் + இடையே**
6. **முத்து + சுடர் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______** **விடை : ஈ) முத்துச்சுடர்**
7. **நிலா + ஒளி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______** **விடை : இ) நிலாவொளி**

**குறு வினா**

**1.காணி நிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?**
காணி நிலம் , மாளிகை , கிணறு, தென்னைமரங்கள் ,நிலாவின் ஒளி ,குயிலின் குரல், இளந்தென்றல் பாரதியார் வேண்டுகிறார்.

**2.பாரதியார் இயற்கையின் மீது கொண்டுள்ள விருப்பம் குறித்து எழுதுக.**
கிணறு, தென்னைமரங்கள் நிலவொளி , குயிலின் குரலோசை , இளந்தென்றல் ஆகியவற்றைக் கேட்டிருப்பதைப் பார்க்கும் போது இயற்கை மீது பாரதியார் மிகுந்த பற்று கொண்டுள்ளதை அறியலாம்.

**உரைநடை உலகம்** : சிறகின் ஓசை

சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **தட்பவெப்பம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______** **விடை : அ) தட்பம் + வெப்பம்**
2. **வேதியுரங்கள் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______** **விடை : ஆ) வேதி + உரங்கள்**
3. **தரை + இறங்கும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்______** **விடை : அ) தரையிறங்கும்**
4. **வழி + தடம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ______** **விடை : ஆ) வழித்தடம்**
5. **சிட்டுக்குருவி வாழ முடியாத பகுதி ______** **விடை : அ) துருவப்பகுதி**

**கோடிட்ட இடத்தை நிரப்புக**

1. மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ____________. **விடை : ஆர்டிக் ஆலா**
2. பறவைகள் வலசை போவதைப் பற்றிப் பாடிய தமிழ்ப்புலவர் ___________. **விடை : சத்திமுத்தப்புலவர்**
3. பறவைகள் இடம்பெயர்வதற்கு ____________ என்று பெயர். **விடை : வலசைபோதல்**
4. இந்தியாவின் பறவை மனிதர் ____________. **விடை : டாக்டர் சலீம் அலி**
5. பறவைகள் வலசை போகக் காரணங்களுள் ஒன்று ____________. **விடை : இனப்பெருக்கம்**

**பொருத்தமான சொல்லைக் கொண்டு நிரப்புக.**

1. மரங்களை வளர்த்து _______யைக் காப்போம் _______ உரங்களைத் தவிர்த்து நிலவளம் காப்போம்.
(செயற்கை/ இயற்கை) **விடை : இயற்கை, செயற்கை**

2.வலசைப் பறவைகள் வருகை தமிழகத்தில்_______ தற்போது சிட்டுக்குருவிகள் எண்ணிக்கை_______
(குறைந்துள்ளது / மிகுந்துள்ளது) **விடை : மிகுந்துள்ளது, குறைந்துள்ளது**

**குறு வினா**

**1.பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?**
உணவு, இருப்பிடம், தட்பவெப்பநிலை மாற்றம், இனப்பெருக்கம்

**2.வலசையின்போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?**
தலையில் சிறகு வளர்தல், இறகுகளின் நிறம் மாறுதல், உடலில் கற்றையாக முடி வளர்தல்

**சிறு வினா**

**1.சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றிச் சிறு குறிப்பு எழுதுக.**

சிட்டுக்குருவி கூடு கட்டிவாழும் பறவையினத்தைச் சார்ந்தது. கூடுகட்டிய பின் மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை இடும். பதினான்கு நாள்கள் அடைகாக்கும். பதினைந்தாம் நாளில் குஞ்சுகள் வெளிவரும். தானியங்கள், புழு பூச்சிகள். மலர் அரும்புகள். இளந்தளிர்கள், தேன் போன்றவை சிட்டுக் குருவிகளின் உணவாகும்.

**2. வலசைப் பறவைகளின் பயணம் பற்றி நீங்கள் அறிந்தவை யாவை?**

பறவைகள் கண்டம்விட்டுக் கண்டம் பறக்கின்றன. பறவைகள் இடம் பெயர்தலை 'வலசை போதல்' என்பர். நீர்வாழ் பறவைகளே பெரும்பாலும் வலசை செல்கின்றன.பறவைகள் தங்களுக்கென ஒரு வழித்தடத்தைத் தேர்தெடுத்து, அந்தப் பாதையிலேயே பறக்கின்றன. பயணம் செய்யும்போது சிலவகைப் பறவைகள் இரை, ஓய்வு போன்ற தேவைகளுக்காகத் தரை இறங்கும். இடையில் எங்கும் நிற்காமல் பறந்து வாழிடம் சேரும் பறவைகளும் உண்டு.

**கற்கண்டு : முதலெழுத்தும் சார்பெழுத்தும்**

**1.முதல் எழுத்துகள் என்பவை யாவை? அவை எதனால் அவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

உயிர் எழுத்துகள் பன்னிரண்டு மெய்யெழுத்துகள் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும். பிற எழுத்துகள் தோன்றுவதற்கும் இயங்குவதற்கும் முதற்காரணமாக இவை இருக்கின்றன. எனவே இவற்றை முதல் எழுத்துகள் என்பர்.

**2.சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

சார்பெழுத்துகள் பத்து .அவை,1. உயிர்மெய் 2. ஆய்தம் 3. உயிரளபெடை 4. ஒற்றளபெடை 5. குற்றியலிகரம் 6. குற்றியலுகரம் 7. ஐகாரக்குறுக்கம் 8. ஔகாரக்குறுக்கம் 9. மகரக்குறுக்கம் 10. ஆய்தக்குறுக்கம்

**3.சொற்களில் ஆய்த எழுத்து எவ்வாறு இடம்பெறும்?**

ஆய்த எழுத்து தனக்குமுன் ஒரு குறில் எழுத்தையும் தனக்குப்பின் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றுச் சொல்லின் இடையில் மட்டுமே வரும். தனித்து இயங்காது.

**திருக்குறள்**

**குறுவினா**

**1.உயிருள்ள உடல் எது?**

அன்பு வாழும் உடலே உயிருள்ள உடல் ஆகும்.

**2.எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?**

எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது அகரம் ஆகும்.

**3.அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?**

அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளும் எனக்கே என்பார்கள். அன்பு உடையவர்கள் தம் உடம்பும் பிறர்க்கே என்பார்கள்.

விரிவானம் :கிழவனும் கடலும்

**கிழவனும் கடலும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாகக் கூறுக.**

**முன்னுரை**

கிழவனும் கடலும் படக்கதையை என் சொந்த நடையில் கதையாகக் கூறுகின்றேன்.

**கிழவனும் கடலும்**

- வயதான மீனவர் சாண்டியாகோ. அவரிடம் மீன் பிடிக்கக் கற்றுக்கொள்வதற்காக மனோலின் என்னும் சிறுவன் வந்தான்.
- கடலுக்குச் சென்றால் மீன் பிடிக்காமல் திரும்பமாட்டார். ஆனால் 84நாட்களாக அவருக்கு ஒரு மீனும் கிடைக்கவில்லை.
- மனோலின் முதல் நாற்பது நாள்களும் அவருடன் கடலுக்குச் சென்றான்.
- ஒரு மீனும் கிடைப்பதில்லை என்று அவனை வேறு படகிற்கு அனுப்பிவிட்டனர் அவனது பெற்றோர்.
- 85வதுநாள் விடா முயற்சியோடு ஒரு பெரிய மீன் பிடித்தார்.
- கரைக்கு வருவதற்குள் சுறாக்கள் தின்றது போக மீனின் தலை, எலும்பு மட்டுமே மிஞ்சியிருந்தது.
- தாத்தா எவ்வளவு பெரிய மீனைப் பிடித்திருக்கிறாய். உன் முயற்சி வென்றுவிட்டது. இனி நான் உன் கூடதான் மீன் பிடிக்க வருவேன் என்றது சாண்டியாகோவிற்கு ஆறுதலாக இருந்தது.

**முடிவுரை**

முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை இக்கதை உணர்த்துகின்றது.

கட்டுரை எழுதுக

இயற்கையைக் காப்போம்

**முன்னுரை**

இயற்கையைக் காப்போம் என்னும் தலைப்பில் கட்டுரையை இனி காண்போம்.

**இயற்கையைக் காப்போம்**

- காடு,மண்,நீர்,கடல்,மேகம் ஆகியன இயற்கையாவே தோன்றியவை ஆகும்.
- இவை நாம் உயிர் வாழத் தேவையான அனைத்தும் கொடுக்கிறது.
- இயற்கையை நாமே கெடுத்தே வருகின்றோம். காடுகளை அழித்து மழையைக் குறைத்தோம்.
- குப்பை போடுவது,பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவது,வாகனப் புகை ஆகியவற்றால் நிலம் மாசு அடைந்து உள்ளது.
- இயற்கையைக் காக்க மரங்களை நட வேண்டும்.
- புகைகளைக் கட்டுப்படுத்த வேண்டும்
- வேதிப்பொருட்களை நாம் பயன்படுத்தக் கூடாது.

முடிவுரை

இயற்கை காப்போம் !உலக உயிர்களைக் காப்போம!

இயல்-3

கவிதைப்பேழை :அறிவியல் ஆத்திச்சூடி

**சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. **உடல் நோய்க்கு ______ தேவை.** **விடை : அ) ஔடதம்**
2. **நண்பர்களுடன்______ விளையாடு.** **விடை : அ) ஒருமித்து**
3. **கண்டறி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : ஆ) கண்டு + அறி**
4. **ஓய்வற என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : அ) ஓய்வு + அற**
5. **ஏன் + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : ஆ) ஏனென்று**
6. **ஔடதம் + ஆம் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______.** **விடை : அ) ஔடதமாம்**

**குறு வினா**

**1.மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?**

மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது அனுபவங்களே!

**சிறுவினா**

**1.அறிவியல் ஆத்திச்சூடி பாடலின் கருத்தை உங்கள் சொந்த நடையில் எழுதுக.**

அறிவியல் முறையில் சிந்தனை செய். ஆய்வில் மூழ்குதல் வேண்டும். அறிவியல் மாற்றங்களையும், உண்மைகளையும் புரிந்துகொள்ளவும்.எதையும் ஈடுபாட்டுடன் செய்யவும். உண்மையைக் கண்டறிய வேண்டும். என்றும் அறிவியல் வெற்றியே தரும். எதையும் ஏன் என்று கேட்கவும். ஐயம் இல்லாமல் தெளிவாகச் சொல்லவும். அயராது உழைத்தல் வேண்டும். அனுபவமே நமக்கு அருமருந்து.

**கவிதைப்பேழை:அறிவியலால் ஆள்வோம்**

1. **அவன் எப்போதும் உண்மையையே __________** **விடை : அ) உரைக்கின்றான்**
2. **ஆழக்கடல் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________** **விடை : ஈ) ஆழம் + கடல்**
3. **விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________** **விடை : ஆ) விண் + வெளி**
4. **நீலம் + வான் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது __________** **விடை : இ) நீலவான்**
5. **இல்லாது + இயங்கும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது __________** விடை : இ) இல்லாதியங்கும்

**குறுவினா**

**1.செயற்கைக்கோள் எவற்றுக்கு எல்லாம் பயன்படுகிறது?**

செய்தித் தொடர்பில் சிறந்து விளங்குவதற்கும், இயற்கை வளங்களையும் புயல், மழை ஆகியவற்றைக் கண்டறிந்து கூறவும் செயற்கைக்கோள் பயன்படுகிறது.

**2.நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?**

நாளைய மனிதனோ விண்ணிலுள்ள கோள்களில் எல்லாம் நகரங்கள் அமைத்து வாழ்ந்திடுவான். அங்குச் சென்றுவர விண்வெளியிலும் பாதை அமைத்திடுவான்.

**உரைநடை உலகம்** :கணியனின் நண்பன்

1. **நுட்பமாகச் சிந்தித்து அறிவது** — **விடை : ஆ) நுண்ணறிவு**
2. **தானே இயங்கும் இயந்திரம் ______** — **விடை : ஆ) தானியங்கி**
3. **நின்றிருந்த என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______** — **விடை : ஆ) நின்று + இருந்த**
4. **அவ்வுருவம் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______** — **விடை :ஆ) அ + உருவம்**
5. **மருத்துவம் + துறை என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______** — **விடை : ஈ) மருத்துவத்துறை**
6. **செயல் + இழக்க என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ______** — **விடை : அ) செயலிழக்க**
7. **நீக்குதல் என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ______** — **விடை : ஈ) சேர்த்தல்**
8. **எளிது என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ______** — **விடை : அ) அரிது**

**கோடிட்ட இடங்களை நிரப்புக**

1.மனிதன் தன் வேலைகளை எளிதாக்கக் கண்டுபிடித்தவை ______. விடை : எந்திரங்கள்

2.தானியங்கிகளுக்கும். எந்திரமனிதர்களுக்கும் இடையே உள்ள முக்கிய வேறுபாடு ______ விடை : செயற்கை நுண்ணறிவு

3.உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ______.விடை : டீப் புளூ (Deep blue)

4.'சோபியா' ரோபோவுக்குக் குடியுரிமை வழங்கிய நாடு ______. விடை : சவுதி அரேபியா

**குறுவினா**

**1.ரோபோ என்னும் சொல் எவ்வாறு உருவானது?**

காரல் கபெக் என்பவர் "ரோபோ" என்னும் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினார். ரோபோ என்ற சொல்லுக்கு 'அடிமை' என்பது பொருள். ஒரு தொழிற்சாலையில் ரோபோக்கள் வேலை செய்வதாக அந்த நாடகத்தில் காட்சிகளை அமைத்திருந்தார். இவ்வாறு ரோபோ என்னும் சொல் வழக்கத்திற்கு வந்தது.

**2.'டீப் புளூ' - மீத்திறன் கணினி பற்றி எழுதுக.**

1997 - ஆம் ஆண்டு மே மாதம் சதுரங்கப் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் உலகச் சதுரங்க வெற்றியாளர் கேரி கேஸ்புரோவ் என்பவர் கலந்து கொண்டார். ஐ.பி.எம். என்னும் நிறுவனம் உருவாக்கிய டீப் புளூ என்னும் மீத்திறன் கணினி அவருடன் போட்டியிட்டது. போட்டியின் முடிவில் டீப் புளூவே வெற்றி வாகை சூடியது.

**சிறுவினா**

**1.எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.**

- மனிதர்கள் செய்யும் அனைத்து வேலைகளையும் செய்ய எந்திரமனிதன் பயன்படுகிறான்.
- பொது இடங்களில் வழிகாட்டுவதற்குப் பயன்படுகின்றான்.
- வெடிகுண்டுகளைச் செயலிழக்கச் செய்கின்றான்.
- மனிதனால் செல்லமுடியாத இடங்களிலும் பயன்படுத்தப்படுகின்றான்.

**3.துருவப் பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திரமனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?**

- துருவப்பகுதிகள் மனிதர்கள் வாழ ஏற்ற சூழ்நிலை இருப்பதில்லை.
- இங்கு ஆய்வு செய்ய மனிதர்களைப் பயன்படுத்த முடியாது.
- எந்திரமனிதர்கள் எந்தப் பருவநிலையிலும் இயங்கும் தன்மை பெற்றவர்கள்.
- அதனைப் பயன்படுத்தினால் ஆய்வுமுழுமை பெறும்.
- அதனால்தான் துருவப்பகுதியில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புகின்றனர்.

விரிவானம் :ஒளி பிறந்தது

**1. சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல் கலாம் எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

- ❖ உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது.
- ❖ தகவல் தொழில்நுட்பத்துறையில் மிகுதியான வளர்ச்சி பெற்றுள்ளது.
- ❖ எவ்வகையான செயற்கைக் கோளையும் ஏவும் திறன் நம்மிடம் உள்ளது.
- ❖ நவீன மருந்துகளும் பாரம்பரிய மருத்துவமுறைகளும் வளர்ச்சி பெற்றுள்ளன.
- ❖ 'அக்னி' மற்றும் 'பிரித்வி' ஏவுகணைகளைச் செலுத்துவதில் வெற்றி பெற்றுள்ளோம்.

- இவற்றையெல்லாம் சுதந்திர இந்தியா அடைந்த வெற்றிகளாக அப்துல்கலாம் குறிப்பிடுகிறார்.

**2. தமக்குப் பெருமகிழ்வை அளித்ததாக அப்துல்கலாம் குறிப்பிடும் நிகழ்வு யாது?**

போலியோவினால் பாதிக்கப்பட்டவர்கள் மூன்று கிலோ எடையுள்ள செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு சிரமப்பட்டு நடப்பதைக் கண்டேன். பாதுகாப்புக் கருவிகளில் பயன்படுத்தப்படும் 'கார்பன் இழையை' கொண்டு முந்நூறு கிராம் எடையில் செயற்கைக் கால்கள் உருவாக்கப்பட்டன. அதனை அவர்கள் அணிந்து மகிழ்ந்த நிகழ்ச்சிதான் தனக்கு பெருமகிழ்வை அளித்ததாகக் கூறுகிறார்.

பொதுக்கட்டுரை : அறிவியல் ஆக்கங்கள்

**முன்னுரை**

அறிவியல் ஆக்கங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**அறிவியல் ஆக்கங்கள்**

- ❖ இன்று தொலைக்காட்சி , வானொலி , தொலைபேசி,இணையம் ஆகியவற்றின் மூலம் வேகமான தகவல் பரிமாற்றம் நடைபெறுகின்றது.
- ❖ உணவு பாதுகாத்தல் , நோய் கண்டுபிடித்தல் ஆகியவற்றில் அணுசக்தி பயன்படுகின்றது.
- ❖ மருத்துவத்துறையில் சிறந்த மருந்துகள்,சிறந்த அறுவைச் சிகிச்சைகள் ,பாதித்த உறுப்புகளை மாற்றியமைத்தல் ஆகியவை அறிவியலால் நமக்குக் கிடைத்துள்ளது.
- ❖ தொடர்வண்டி , வானூர்தி , இராக்கெட்,நீர் மூழ்கிக் கப்பல் ஆகியவை அறிவியலால் நமக்குக் கிடைத்துள்ளது.
- ❖ விளைச்சலையும் அறிவியல் பெருக்குகின்றது.
- ❖ இன்று நாம் பயன்படுத்தும் அனைத்தும் அறிவியலால் கிடைத்துள்ளது.

முடிவுரை

அறிவியல் இல்லாமல் இன்று உலகமே இயங்காது.

**கலைச்சொல்லாக்கம்**

**இயல் -1**

| | | | |
|---|---|---|---|
| வலஞ்சுழி | Clock wise | இடஞ்சுழி | Anti clock wise |
| இணையம் | Internet | குரல்தேடல் | Voice Search |
| தேடுபொறி | Search Engine | தொடுதிரை | Touch Screen |

**இயல் -2**

| | | | |
|---|---|---|---|
| கண்டம் | Continent | தட்ப வெப்பநிலை | Climate |
| வானிலை | Weather | வலசை | Migration |
| புகலிடம் | Sanctuary | புவிஈர்ப்புப்புலம் | Gravitational Field |

இயல் -3

| | | | |
|---|---|---|---|
| செயற்கை நுண்ணறிவு | Artificial Intelligence | ஆய்வு | Research |
| மீத்திறன் கணினி | Super Computer | கோள் | Planet |
| ஒளடதம் | Medicine | எந்திர மனிதன் | Robot |
| செயற்கைக்கோள் | Satellite | நுண்ணறிவு | Intelligence |

ஆக்கம்
ச.சேட்டு மதார்சா
ப.ஆ-தமிழ்
ஈ.கே.எம்.அ.க.மதரஸா
இஸ்லாமியா உயர்நிலைப் பள்ளி,
ஈரோடு-1
அலைபேசி :8883681115

Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.Com